"கர்த்தர் நகரைக் காக்காவிட்டால்
அதைக் காக்கிறவன் கண்விழிப்பது விருத்தம்" சங்கீதம்: 127:1

சத்தியவேத பாது

# காவலன்

தந்தி: "கதலிக்பிறஸ்" யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 300
REGISTERED AT THE CEYLON G.P.O. AS A NEWSPAPER

சத்தியவேத
பாதுகாவலன்
வருடசந்தா
இலங்கை: வெளிநாடுகள்:
ரூபா 9-00
(தபாற்செலவு உட்பட)
தனிப்பிரதி சதம் 15

89-ம் புத். | யாழ்ப்பாணம், 1964-ம் ஆண்டு மார்கழிமீ 12-ந்உ சனிக்கிழமை — பிரதிசதம் 15 | 49-ம் இல.

## "எனது இருதயத்தை இந்தியாவிலேயே விட்டுச்செல்கின்றேன்"

## "இந்திய யாத்திரையை என்னுல் மறக்கவே முடியாது" — சின்னப்ப தந்தை

# ஒப்பற்ற திருயாத்திரையின் உருக்கமான முடிவு

▲ ஆகாயத்தில் சமாதானப்புருக்கள் பறந்தன ▲ ஆனந்தக் கண்ணீரோடு மக்கள் பிரியாவிடைகூறி வழிஅனுப்பினர் ▲ அன்பின் பாப்பரசர்இருகரங்களையும்கூப்பி விடைபெற்ருர்

# ரேமாபுரியில் குதூகலமான வரவேற்பு

தமது மூன்றுநாள் திருயாத்திரையை முடித்துக்கொண்டு சென்றசனிக்கிழமை இந்தியாவை விட்டுத்திரும்பிய சின்னப்ப பாப்பரசரை 5,000-க்கு மேலானமக்கள் ரேமாபுரி விமானநிலையத்தில் காத்திருந்து குதூகல மகிழ்ச்சியுடன் வரவேற்றனர். விமானத்திலிருந்து புன்முறுவலுடன் இறங்கி வந்த தந்தையிடம் எவ்வித களைப்பின் அடையாளமும் காணப்படவில்லை. அரைமணிநேரம் நீடித்த வரவேற்பு உபசாரங்களின்பின் அவர் மோட்டார்ரத மார்க்கமாக அலங்கரிக்கப்பட்ட வீதிகளினூடே தமது வத்திக்கான் நகரத்தை அடைந்தார்.

இத்தாலிய பிரதமர் சிஞ்ஞோர் அல்டோமோரே பாப்பரசரை வரவேற்றுப் பேசுகையில், அவரின் இந்திய யாத்திரையின் ஆன்மீக முக்கியத்துவத்தையும் அதன் பலாபலன்களையும் குறிப்பிட்டார்.

[தொடர்ச்சி 5-ம் பக்கம்]



## கிறீஸ்துவைப் போற்றுகின்ருர்

இந்தியாவின் பூதான இயக்கத் தலைவரும், வறுமையகற்றும் வள்ளல் என இந்தியாவின் பாராட்டைப் பெற்றவரும், மகாத்மா காந்தியைப் பின்பற்றி வந்தவருமான வினோபாஜீ அவர்கள் அண்மையில் வெளியிட்ட "அன்பின் அவதாரமாகிய கிறிஸ்து" எனும் நூலில் கிறிஸ்துநாதரைப் பெரிதும் போற்றுகின்ருர். "இந்திய கலாசாரத்தின் சார்பாக கிறிஸ்து இந்தியாவுக்கு மிகவும் உகந்தவர் என நான் கூறுகிறேன்" என்கிருர் வினோபாஜீ.

## பாப்பரசரின் பம்பாய் இல்லம்

பரிசுத்த தந்தை பம்பாயில் தங்கிநின்ற நாட்களில் கருதினல் கிறேசியஸ் ஆண்டகையின் தென்னைசூழ்ந்த இல்லத்தின் இரண்டாம் மாடியிலுள்ள நான்கு அறைகள் தந்தையின் பாவிப்புக்காக ஒதுக்கப்பட்டிருந்தன. இம்மாடியிலே முன்மண்டபம் ஒன்றுண்டு. இம்மண்டபத்தில் நின்றுகொண்டு அவர் கீழேகூடியிருக்கும் மக்களை ஆசீர்வதிக்கக்கூடியதாயிருந்து. அங்கிருந்து பார்த்தால் இரண்டு மைலுக்கு அப்பால் அராபிய கடலைக் காணலாம். பாப்பரசரின் பாவிப்புக்காக வைக்கப்பட்டிருந்த கட்டிலில் அவரின் சின்னங்கள் பொறிக்கப்பட்டிருந்தன. அங்கு அவருக்காகப் பூட்டப்பட்டிருந்த இருதொலைபேசிகளில் ஒன்றின் மூலம் அவர் வத்திக்கானுடன் நேரே சம்பாஷிக்கக்கூடியதாயிருந்தது.

## வத்திக்கானின் புதிய தபால் முத்திரை

பம்பாயில் நடந்த 38-வது சர்வதேச சற்பிரசாத மகாநாட்டின் ஞாபகார்த்தமாக வத்திக்கான் இராச்சியம் 4 இனத் தபால் முத்திரைகளைச் சென்ற 5-ம் திகதி வெளியிட்டன வருகிற வருடம் மார்கழி 31-ம் திகதிவரையும் அவை விற்பனையில் இருக்கும்.

## பரிசுத்த தந்தைக்குச் சோறும் கறியும்!

இந்தியாவில் தங்கியிருந்த நாட்களில் பரிசுத்த தந்தை இந்திய உணவை உண்டார். சாதம், கறிவகை, சப்பாத்தி முதலியன அடங்கிய இந்திய உணவைத் தயாரிப்பதற்காக பம்பாய் அதிமேற்றிராணியாரின் இல்லத்தில் சில கன்னியர்கள் பொறுப்பேற்றிருந்தார்கள்.

**18-12-64 வெள்ளி**
**ஒருசந்தி நாள்**

## இந்தியரின் சமயஉணர்ச்சியைப் பாராட்டினர் கருதினல் அகாஜியானியன்

பம்பாய் சற்பிரசாத மகாநாட்டுக்குப் பாப்பரசரின் விசேஷ தூதராக அனுப்பப்பட்ட கருதினல் அகாஜியானியன் பம்பாயில்வந்து இறங்கியபோது அவரைச் சன்மானிக்க பல்லாயிரக்கணக்கானேர் விமான நிலையத்துக்குச் சென்றிருந்தனர். அவர்களுக்குக் கூறிய சிற்றுரையில் அவர் இந்தியரின் சமயபற்றையும், மனஉறுதியையும், மதவைராக்கியத்தையும் பெரிதும் பாராட்டினர்.

இதுவரை நடந்த 37 சற்பிரசாத மகாநாடுகளுக்கும் கிடையாத மகா

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

# புதியதேர்தல் 24-3-1965

பாராளுமன்றம் இம்மாதம் 17-ந் திகதி கலைக்கப்படும். புதியதேர்தல் அடுத்துவரும் பங்குனிமாதம் 24-ந் திகதி நடைபெறும். புதிய பாராளுமன்றம் 1965 சித்திரைமாதம் 7-ந் திகதி கூடும். தேர்தலுக்கான நியமனப்பத்திரங்கள் 1965 தைமாதம் 15-ந் திகதி ஏற்கப்படும்.

**புதிய புஷ்பங்களும் நத்தார் விருட்சங்களும்**
உங்களுக்குத் தேவையா?



கடந்த 23வருடங்களுக்கு மேலாக இத்தேவையைப் பூர்த்திசெய்வதில் கீர்த்தி பெற்று, இலங்கை முழுவதிலும் புகழ்நாட்டி யாவருடைய உவப்பையும், நம்பிக்கையையும் பெற்றவர்கள்:

எஸ். ஏ. பெர்னுந்து,
பிரதம மலர் வியாபாரிகள்.
தபாற்பெட்டி இல. 16,
நுவரெலியா.
தந்தி: பாத்திமா—தொலைபேசி: 283

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை வழிகாட்டி

### மார்கழி மாதம்—1964.

| | | | |
|---|---|---|---|
| 13 | ஞா. | ஆகமனகாலத்தின் 3-ம் ஞாயிறு | [ஊ] |
| 14 | தி. | அர்ச். ஞானி | [ஊ] |
| 15 | செ. | அர்ச். இரோமுஸ் | [ஊ] |
| 16 | பு. | அர்ச். இயுசேபியார் | [ஊ] |
| 17 | வி. | அர்ச். லாசறஸ் | [ஊ] |
| 18 | வெ. | கர்த்தர் பிறப்பு ஆயத். | [ஊ] |
| 19 | ச. | அர்ச். போஸ்ரா | [ஊ] |

# சத்தியவேத பாதுகாவலன்

1964-ம் ஆண்டு மார்கழி மாதம் 12-ந் திகதி

## நீங்காத நினைவு

சாதாரணமாகத் தினசரி ஏராளமான நிகழ்ச்சிகள் எம்மை எதிர்நோக்குகின்றன. ஒவ்வொன்றும் அவ்வத் தருணத்தில் புதுமையாகவே தோன்றும் ஆயின், காலப்போக்கில் புதிய நிகழ்ச்சிகள் எம்முன் தோன்றப் புதியதாகத் தோன்றியவை பழமையாகிவிடும். எம் மனதைவிட்டும் அகன்றுவிடும்.

அபூர்வ நிகழ்ச்சிகள் அடிக்கடி நிகழ்வன அல்ல. அவை மனித உள்ளத்தைவிட்டு விரைவாக அகன்று விடுவனவும் அல்ல. காந்தி, கென்னடி கொலை நிகழ்ச்சிகள்...... அருளப்ப பாப்பு, ஜவகர்லால் நேரு பிரிவுச் சம்பவங்கள் உலகோரின் உள்ளத்தைவிட்டு இலகுவில் மறையக் கூடியனவா? அல்ல, அல்ல.

பாப்புதந்தையின் பாரத தரிசிப்பும் ஆசியமக்களின், சிறப்பாகப் பாரதவாசிகளின் நெஞ்சில் நீண்டகாலம் நிலைத்திருக்கவல்லது என்பது பாரதப் பிரமுகர்கள் பலரின் ஏகோபித்த எண்ணம். பிரபல இந்திய பத்திரிகைகளின் கூட்டு அபிப்பிராயம் இது.

பாப்பரசரின் வருகை கண்டு சிறுசிறு சிலுசிலுப்புகள் முளைத்தெழுந்தன. தப்பபிப்பிராயம் காரணமாக ஏற்பட்டவை அவை. இந்திய தலைவர்களும், பத்திரிகைகளும் வன்மையாகக் கண்டித்தனர் இவற்றை. பாரத ஆட்சியாளரும், பம்பாய் மாநிலஅரசும் கடும் நடவடிக்கைகள் மேற்கொண்டன இந்த அராஜகங்களை ஒழிக்க.

“தீமை செய்தவனுக்கு நன்மையே செய்; உன் எதிரிக்கும் அன்புகாட்டு” என்ற அன்பு மார்க்கத்தைப் போதித்தவரின் பிரதிநிதியே பாரதத்துக்கு வருகைதந்தவர். பாரத மண்ணில் காலடி வைத்ததுமே அவர் விடுத்த வேண்டுகோள் தமது வருகையை எதிர்த்தவர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டுமென்பதே.

அவர்களை நாம் நேசிக்கிறோம். அவர்கட்கோ அல்லது வேறு எவர்க்கோ ஊறுசெய்வது எமக்குப் பிடித்தமானது அல்ல. அவர்கள் மட்டில் நாம் அன்புகாட்டுவதாகத் தெரிவியுங்கள் எனப் பாப்பு தந்தை நேருமகள் இந்திரா மூலம் அவர்கட்குச் செய்தியனுப்பினர்.

பாப்பரசரின் இச்செயல் பாரதமக்கள் அவரை ஒரு மகாத்மாவாக வழிபட வழிவகுத்தது. அன்பு, எளிமை, சகிப்பு, அமைதி என்ற தத்துவங்களைப் போதிக்க வந்த இந்த மகாத்மாவை அவர்கள் கத்தோலிக்க மதத்தலைவராக அல்ல, உலகப் பெரும் தத்துவ ஞானிகளில் ஒருவராக மதிக்கச் செய்தது.

உலகமடங்கிலும் பரந்துள்ள ஒருபெரிய மதத்தின் பிரதம குருவாக, 55 கோடி கத்தோலிக்கரின் ஆன்மீக தலைவராக, வத்திக்கான் இராச்சியத்தின் அரசராக விளங்கும் பாப்பரசர் பதவிப்பெருமையை ஒதுக்கிவிட்டுச் சாதாரண பிரயாணியாக இந்தியாவுக்கு வருகை தந்தமை உலகமடங்கிலுமுள்ள அரசியல் தலைவர்கட்குச் சிறந்தவோர் படிப்பினை என்கிறார் பாரதத்தின் முதுபெரும் அரசியல் பிரமுகர் ஒருவர்.

உலக அமைதியின் அவசியம்பற்றி உதடுகள் வர்ணித்துக் கொண்டேயிருக்க உள்ளத்திலோ பயங்கர ஏவாயுதங்களின் ஆக்கம் பற்றி, அல்லது அடுத்த நாடுகளைச் சுரண்டுவதுபற்றியே இன்றைய தேசத்தலைவர்கள் பலர் சிந்தித்து வருகின்றனர். அவர்கட்கு முற்றிலும் புறம்பாகப் பஞ்சசீலக் கொள்கைகளின் தத்துவத்தில் நம்பிக்கை கொண்டுள்ள பாரதம் இப்போதுதான் தனது கொள்கைகட்கு மனம், வாக்கு, காயம் மூன்றுலும் உதவக்கூடிய முதுபெரும் ஞானி ஒருவரை வந்தித்திருக்கிறது என்கிறார் வேறொரு இந்திய பிரமுகர்.

பாரதம் இதுவரை உலகப்பெருந்தலைவர்கள் பலரை வரவேற்றிருக்கின்றது. அவர்களின் பொன்மொழிகளைச் செவிமடுத்திருக்கிறது. ஆயினும், அவர்கள் அனைவரிலும் முற்றிலும் மாறுபட்டவராகச் சின்னப்பதந்தை விளங்கினர். இன, மொழி, மத பேதமின்றித் திரள்திரளாக மக்கள் கூடிநின்று தந்தையைத் தரிசித்ததும், அவரின் அமுத வாசகங்களைச் செவிமடுத்ததும் இந்த உண்மையை உலகுக்கு எடுத்துக்காட்டியுள்ளது.

பல்வேறு மதத்தலைவர்களும், கட்சிப்பிரமுகர்களும் பாப்புவைச் சந்தித்ததும் தங்கள் மனமார்ந்த அன்பளிப்புக்களைத் தந்ததும் அவர்மட்டில் அவர்கள் கொண்டுள்ள பெரும்மதிப்பை எடுத்தோதியது. அவரின் தெய்வீக தோற்றம் என்னை ஆட்கொண்டுவிட்டது என பக்தியுடன் குறிப்பிட்டார் ஒரு பிறமதத்தலைவர்.

பரிசுத்த தந்தையின் பாரத தரிசிப்பு பாரதமக்கள் கத்தோலிக்கத்தின் மட்டில் கொண்டிருந்த பல தப்பபிப்பிராயங்களைக் களைந்துவிட்டது. கிறிஸ்துவின் அன்பு மார்க்கத்தின் உண்மைத் தத்துவங்களைப் பறைசாற்றியிருக்கிறது. பம்பாயில் கண்டவையும், கேட்டவையும் அவர்கள் உள்ளத்தில் நீண்டகாலம் நிலைத்திருக்கும்.

வாழ்க சின்னப்ப பாப்பரசர்! வளர்க அவர்தம் அன்புவழி!

## திரும்பவும் நினைவூட்டுகின்றோம்

அநேக சந்தாநேயர்கள் தங்கள் கடமையை உணர்ந்து, நாம் கேட்டுக் கொண்டபடி, சந்தாப்பணத்தை இம்மாதம் 10-ம் தேதிக்குமுன் அனுப்பியுள்ளார்கள். இவர்களுக்கு எமது மனப்பூர்வமான நன்றி.

சில நேயர்களிடமிருந்து பணமாவது, எவ்விதபதிலாவது இன்னும் கிடைக்கவில்லையென்று வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம்: ஒவ்வொரு நேயரினது ஆதரவும் ஒத்துழைப்பும் காவலனுக்கு, விசேஷமாக இந்நாட்களில் இன்றியமையாதவை என்பதை இவர்கள் விளங்கி, உணர்ந்து, செலுத்தவேண்டிய தொகையை மேலதிக தாமதமின்றி அனுப்பிவிடும்படி வெகுதயவாக மீண்டும் வேண்டுகின்றோம்.

சீக்கிரமாகக் கொடுப்பது இருமடங்கு கொடுப்பதற்குச் சமானம்: ஒரு வருட சந்தாவை அவ்வருடம் தொடங்கமுன் செலுத்துவதே ஒழுங்கு. ஆகையால் எமது பிரமாணிக்கமும் அபிமானமும் உள்ள சந்தாநேயர்கள் 1965-ம் ஆண்டுச் சந்தாவை நிகழும் மார்கழிமாதம் 23-ம் தேதிக்குமுன் அனுப்பிக் காவலனை ஆதரிப்பார்களென்று முழுநம்பிக்கையுடன் எதிர்பார்க்கிறோம்.

நிர்வாக ஆசிரியர்.

# ரசத்துளிகள்

**பம்பாயில் பாப்பரசர் நிகழ்த்திய சொற்பொழிவுகளிலிருந்து சிலமணிமொழிகள் இங்கு தரப்படுகின்றன. பாரத மக்களின் உள்ளத்தைக் கொண்ட வார்த்தைகள் இவை.**

பரஸ்பர அழிவுபற்றிய பீதியின் அடிப்படையிலோ அன்றி அச்சத்தின் மீதோ அல்லது பயங்கரத்தின் அடிப்படையிலோ பல்வேறு நாடுகளிடையே அமைதியை, ஐக்கியத்தை, நல்லதொரு இணைப்பை ஏற்படுத்துதல் முடியாது. அன்பினால் உருவான, அன்புசெய்யவே ஆசைகொண்ட ஆண்டவனிடத்திலிருந்து பிறக்கும் அன்பின் அடிப்படையிலேயே ஐக்கியத்தை, அமைதியை, இன்பப்பிணைப்பை உருவாக்க இயலும்.

● ● ●

மக்களின் நல்வாழ்வுக்காக இந்தியா மாபெரும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளது. இது வறுமையையும், பசியையும் நோயையும் எதிர்த்து உலகு நடாத்தும் போராட்டத்தோடு ஒப்பிடக்கூடியது. மனித இனத்தின் சிறந்த எதிர்காலத்தை உருவாக்குவதில் கத்தோலிக்கர்களும் கத்தோலிக்கரல்லாதவர்களும் தோளோடு தோள்நின்று ஒன்றுபட்டு உழைத்தல் வேண்டும். இல்லையேல் இப்போராட்டங்களில் மனித இனம் நசுக்கப்பட்டுவிடும்.

● ● ●

பத்திரிகைகள் அல்லது வானொலிகள் அல்லது பிறசாதனங்கள் எவற்றின்மூலமும் நாம் ஒன்றுபட இயலாது. அவ்விதம் ஒன்றுபட்டாலும் அவ்வொற்றுமை நீண்டகாலம் நிலைக்காது. நமது உள்ளத்தால், பரஸ்பர நல்லெண்ணத்தால், பரஸ்பர மரியாதையால் நாம் ஒன்றுபடுதல் வேண்டும், நமக்காகமட்டுமல்ல மனிதகுலத்தின் எதிர்கால நல்வாழ்வுக்காகவும் நாம் ஒன்றுபடுதல் அவசியமானது.

● ● ●

இந்தியாவின் தலைவாயிலாகவிளங்கும் பம்பாய்நகரத்தைப் பாராட்ட எமக்கொரு சந்தர்ப்பம் தந்தமைக்காக நன்றியுடையோம். ஆசியாவில் நாம்மேற்கொண்ட அன்புயாத்திரையின் நினைவுச்சின்னமாக பம்பாய் நகரம் எம்மனதில் நிலைத்திருக்கும்: இந்நகரமக்கள் தலையிடும் காரியங்களிலெல்லாம் இறைவனின் ஆசி கூடவே விளங்கவேண்டுமெனப் பிரார்த்திக்கின்றோம்.

● ● ●

மாபெரும் இந்தியத்தலைவர்களான மகாத்மாகாந்தி, ஜவர்கர்லால் நேரு என்பவர்களிடம் தார்மீக சீலத்தையும் பொதுநலத்தொண்டு உணர்ச்சிகளையும் கண்டு அகில உலகுமே போற்றியது. அக்குணச்சிறப்புகளே இந்தியமக்களின் ஒற்றுமைக்கும் சுபீட்சத்துக்கும், மதிப்புக்கும் உத்தரவாதமாக விளங்கும் என்பது எமது அசைக்கமுடியாத நம்பிக்கை.

## பாப்பரசருக்குப் பாரதம் தந்த அன்பளிப்புகள்

### 1. ஜனாதிபதி சேர். ராதாகிருஷ்ணன்

10 தொகுதிகள் கொண்ட இந்துமத வேதாகம நூல்கள். ராதாகிருஷ்ணனால் எழுதப்பட்டவை. தந்தத்தால் செய்யப்பட்ட பூசைப்புத்தகம் தாங்குகோல். பௌத்த மதக்கொள்கையை விளக்கும் வெண்கல விளக்கு. தமது கையெழுத்துடன் கூடிய உருவப்படம்.

### 2. யோண்பொஸ்கோ ஜாக்கோசி

(நாகாலாந்து அமைச்சர்)

அமைதியையும் அன்பையும் பிரதிபலிக்கும் ஈட்டி. நாகர்கள் எதிரிகளின் தலைகளை ஈட்டிகொண்டு சீவுவதில் பேர்போனவர்கள். அவர்கள் தற்போது மனம்மாறி அமைதிபெற்று வருகின்றார்கள் என்பதைக் காட்டும் சின்னம் இது. ஈட்டியின் மறுமுனையில் பொற்சிலுவையும் சமாதான நட்சத்திரங்களும் பொறிக்கப்பட்டிருந்தன.

### 3. தயானந்த்

(முதல் அமைச்சர், கோவை,)

புனிதசவேரியாரின் அழகிய வேலைப்பாடமைந்த பொற்சொரூபம், கோவை மக்களின் சார்பில்.

### 4. பாம்

(இந்திய புருக்பொண்ட தேயிலைக் கம்பெனி அதிபர்.)

அழகிய காஷ்மீரிய தேவதாரு மரத்தில் தயாரிக்கப்பட்ட பெட்டி. பெட்டியின் முன்புறத்தில் ஒரு மலரும் இரு இதழ்களும் பொறிக்கப்பட்டிருந்தன. டார்ஜிலிங்கிலிருந்துவந்த திறமான தேயிலைகொண்ட ஆறு அழகிய டப்பாக்கள் பெட்டியினுள் காணப்பட்டன.

பாப்பரசருக்குத் தரப்பட்ட ஆயிரக்கணக்கான பரிசில்களின் நாமாவளியில் வெளியிடப்பட்டவை மேலே தரப்பட்டுள்ளன. இப்பட்டியலில் இன்னும்பல பரிசுப்பொருட்களின் விபரம் பின்னர் வெளிவரும்.

—தகவல் மடோனு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகளிர் மன்றம்

## மகளிர்மன்ற ரசிகர்களே வணக்கம்!

கிறிஸ்து ஜயந்திவிழாவை யொட்டி சிறுகதைப் போட்டியொன்றை நடாத்த உத்தேசித்துள்ளோம். அப்போட்டியின் விபரங்கள் இதோ:

(1) இப்போட்டி மகளிர்க்குமட்டுமே உரியது அல்ல, எனவே, ஆடவர்களும் தாராளமாகக் கலந்துகொள்ளலாம்.

(2) சிறுகதையின் கருத்து: "பாலன்பிறப்பு, மகளிர் நலன்" என்ற இரு அம்சங்களையும் தொடர்புபடுத்துவதாக அமைதல்வேண்டும்.

(3) போட்டிக்கான கதைகள் புல்ஸ்காப்தாளின் இருபக்கங்கட்குமேற் படக் கூடாது.

(4) முடிவுதிகதி 24-12-64.

(5) முகவரி: மகளிர்மன்ற சிறுகதைப்போட்டி, காவலன் அலுவலகம், மேற்றிராசன இல்லம், யாழ்ப்பாணம்.

(6) சிறந்த மூன்று கதைகட்குத் தகுதிவாய்ந்த பரிசில்கள் வழங்கப் படும்.

(7) மத்தியஸ்தர் குழுவில் காவலன் ஆசிரியர், மகளிர்மன்ற ஆசிரியை, பேசும்பேழை ஆசிரியர் மூவரும் அடங்குவர்.

(8) இப்போட்டி சம்பந்தமான சகலபிரச்சினைகளிலும் காவலன் ஆசிரியர் தீர்ப்பே இறுதியானதாகும்.

சோதரி ரோஜா.

# வாராதிருப்பீரோ வண்ணமலர்ப்பாலகனே!...

மாளிகையின் மகிமையிலே மன்னரெல்லாம் பிறந்திடுவார்
மாடடையும் ஒருகுடிலில் மகிபனாக வந்துதித்தே
மாமரியாள் கரங்களிலே மாண்புறவே தவழ்ந்துவந்தே
மானிலத்தை மகிழ்வித்த மாசற்ற பாலகனே!......
பாவமதால் பாழடைந்த பாவிகளெம் இதயங்களை
பச்சாத்தாப மதனால் பரிசுத்தமாக்கி யுலக
பாசமென்னும் தளையறுத்துப் பரலோக பக்கமாக்கிப்
பரமனுக்கோர் இல்லம் பாங்காக அமைத்துவிட்டோம்!......

வாராதிருப்பீரோ! வண்ணமலர்ப் பாலகனே!......

பொன்னொளி மின்னுமாடை புரவலரை அலங்கரிக்கும்
போர்த்துவிட்ட கந்தையாடை உன்மேனி தழுவிடவே
பொன்னிறமாம் வைக்கோலால் பொதிந்துமே அமைத்துவிட்ட
புல்லணையின்மேல் துயின்றும் புன்னகைசெய் பாலகனே!......
வெறுமையாத விளங்கிநின்ற வீணரெங்கள் இதயங்களின்
வெதுவெதுப்புக் குணமகற்றி விண்ணுலகை நாடிடவே
பொறுமை, தாழ்மை, சிநேகமெனும் பொற்புநிறை புண்யத்தால்
போதனுமக்கோர் புல்லணையைப் பொற்புறவே அமைத்துவிட்டோம்!....

வாராதிருப்பீரோ! வண்ணமலர்ப் பாலகனே!......

ஆயிரமாம் கோடிபடை அரசர்பதம் வணங்கிநிற்கும்
ஆடுமேய்க்கும் இடையர்களும், ஆனமூன்று வேந்தர்களும்
பாயிரத்தின்படியே காட்சி தந்துநின்ற விண்மீன்கண்டு
பாசமுடன் ஓடிவந்து பணிய மகிழ்ந்த பாலகனே!......
நாமம் போற்றிப் புகழ்வதையே நலமாயெண்ணும் இவ்வுலகின்
நாகரிக வேறுபாட்டை நாளிதனில் நீக்கிவிட்டே
பாமரரும் பண்டிதரும், பாலர் வாலர் யாவருமே
பேதம் நீக்கியுன் பதமே போற்றிடவே காத்திருப்போம்!......

வாராதிருப்பீரோ! வண்ணமலர்ப் பாலகனே!...—

பல்லாண்டு பாடிடுவோர் பார்த்திபரைப் போற்றிடுவார்
பாசமற்றே பலரால் புறக்கணிக்கப் பட்டிருந்தும்
விண்ணுலக தூதர்குழாம் விரைந்துவந்தே இனிமையாக
வீணைமீட்டிப் புகழ்ந்திடவே வியப்புற்ற பாலகனே!......
மண்ணுலக மாந்தர் நாமும் மாண்புநிறை கீதங்களால்
மகிபனுமைப் போற்றிடவே மனந்தனிலே யுன்னியே
தாசராக ஒன்றுசேர்ந்து தரணிபோற்றும் வார்த்தைகளால்
தாலாட்டுப் பாடிநின்றோம் தாமதமேன் இன்னமுமே! .....

வாராதிருப்பீரோ! வண்ணமலர்ப் பாலகனே!......

# இ. போ. ச. பஸ்சிலே

பஸ்சில் பிரயாணம்செய்வது அலுப்புக்குரியதே! ஆயின், ரசிப்புக்குரியதும்கூட; ரசிக்கக்கூடியது மட்டுமா? சமுகவாழ்வில் நல்விடயங்களை அறிந்து நம்மை நாமே நல்வழிப்படுத்துதற்கும் இப்பிரயாணம் வழிவகுக்கின்றது என்றால் அது உண்மையே! இதோ நான் ரசித்த சில சம்பவங்கள்:

## பொன்னைவிரும்பும் பூமியிலே!...

இ. போ. ச. பஸ் ஓடிக்கொண்டிருந்தது. நான்கு இளம் வாலிபர் ஓர் ஆசனத்தில் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தனர். சீதனப்பிரச்சினை தலைகாட்டியது அவர்கள் பேச்சின் நடுவே. "சீதனப் பிரச்சினையை ஒழித்துவிட வேண்டும்; சீதனத்துக்காகவே சிலர் விவாகஞ் செய்கிறார்களேயொழிய உள்ளத்தில் எழும் விருப்பினாலல்ல. ஆகவே, மெய்விவாகமென்னும் தேவதிரவிய அனுமானத்தின் நோக்கமாகிய அடிப்படை அன்பெனும் கொள்கையே மாறிவிடுகின்றது" என்றார் ஓர் இளைஞர். இவர் தன் தங்கைக்கு ஏராளமான சீதனம் அளித்து விவாகம் செய்துவைத்தும் அவள் வாழ்க்கை பாழானதையிட்டு மனமுடைந்த வாலிபர் என்பது அவர் பேச்சிலிருந்து தெளிவாகியது. இதை அவதானமாகக் கேட்டுக்கொண்டிருந்த மற்றொரு ஆடவர்: "நான் எவ்வித சீதனத்தையும் எதிர்பார்க்கமாட்டேன்; ஆயின் எனக்கு ஒரு மோட்டார்வண்டி தரக்கூடிய பெண்ணை விவாகம் செய்துவிடுவேன்" என்றார். மோட்டார்ரதம் வாங்குதற்கே எத்தனை ஆயிரம் ரூபாக்களைப் பெண்ணின் பெற்றோர் தம் கண்ணீரில் சேர்க்கவேண்டும் என்பதை இவர் விளங்கவில்லைப்போலும். அடுத்தாற்போலிருந்த வாலிபரோ: "எனக்கு மோட்டார்ரதமே வேண்டாம்; ஒரு ஸ்கூட்டர்மட்டும் கிடைத்தால் போதும்" என்றார். கடைசியாக இருந்த வாலிபரோ மௌனம்சாதித்தார். மற்றவர்களோ 'உன்பாடு என்ன? என்று வாயைக்கிளறினார்கள். அந்த இளைஞரோ: "நான் சீதனத்தையோ, பவனிவர வாகனங்களையோ எதிர்பார்க்கவில்லை. குணக்குன்றான ஒரு பெண்மட்டும் என்மனைவியாக வாய்த்துவிட்டால் என் வாழ்க்கை ரதமே அமுதமாக ஓடிக்கொண்டிருக்கும்; எனக்குக் கைகால்இல்லையா உழைத்து என்மனைவியைப் போஷிப்பதற்கு?" என்றார். வாய்மூடி மௌனிகளானார்கள் மற்றையோர். பொன்னை விரும்பும் இப்பூமியிலே குணத்தை விரும்பும் ஆடவர்களும் இருக்கத்தான் செய்கின்றார்கள். மங்கையரே! கவனித்தீர்களா? பண்புள்ள ஆடவர் விரும்புவது எதை என்று? ......

## நெஞ்சில் ஓர் ஆலயம்!

மற்றொருநாள், யாழ்நகரிலிருந்து கீரிமலையை நோக்கி விரைந்துகொண்டிருந்தது பஸ்வண்டி. நாகரிகமான வாலிபரொருவர் அமர்ந்திருந்தார் ஓர் இடத்தே. எத்தனையோ ஆசனங்கள் காலியாயிருந்தும் அவரைச் சுற்றியிருந்த ஆசனங்களையே வாலிபரும் வயோதிபரும் ஆக்கிரமித்துக்கொண்டிருந்தனர். காரணம்... நகைச்சுவையையே அவர் தம் சொந்தமாக்கிக் கொண்டிருந்ததே. இந்த இளைஞரது வாயினின்று புறப்பட்ட ஒவ்வொரு வார்த்தையுமே நவரசம் பொருந்தியதாக அத்தனைபேரையும் சிரிப்பினால் குலுங்கவைத்துக் கொண்டிருந்தது. இதற்கிடையில் அவரது சில செய்கைகளும் மற்றையோரின் கவனத்தைக் கவரவே செய்தன. கடைசியாகச் சித்தங்கேணியில் தரித்தது பஸ்வண்டி. இரண்டு வயோதிபர் இறங்குதற்காக எழுந்தனர். "தம்பீ! உமது நகைச்சுவை பிரயாண அலுப்பையே போக்கிவிட்டது; உம் நகைச்சுவை என்றும் வாழ்க!" என்று வாழ்த்தினார் ஒருவர். மற்றவரோ, "தம்பி! உமதுநகைச்சுவை சிறந்ததே. ஆயின் ஒவ்வொரு கத்தோலிக்க தேவாலயத்தைத் தாண்டும் போதும் நீர் உமது பேச்சைநிறுத்தி, பரமதிரித்துவ ஸ்தோத்திரத்தை வரைந்து கையெடுத்துக் கும்பிட்ட காட்சியை நான்வாழ்நாளிலே மறக்கமாட்டேன். இந்த உமது முன்மாதிரிகை உமது நெஞ்சில் ஆலயமாக விளங்கும் இறைவனின் சந்நிதானத்தை நாமும் உணர வழிகாட்டியது. உம்மை இவ்வழியில் பயிற்றிய உம் அன்னை வாழ்க" என்று புகழ்ந்துவிட்டு இறங்கினார். அந்த அன்னைமட்டும் அங்கேயிருந்திருந்தால் ஈன்ற பொழுதில் பெரிதுவந்திருப்பாளன்றோ!......

## அன்னை என்பவள் நீதானே!

வேறொருநாள், சுமார் எட்டுவயது நிரம்பாத [illegible] பாலார் அமர்ந்திருந்த ஆசனத்தில் அமர்ந்து பிரயாணம் செய்துகொண்டிருந்தான். எத்தனையோ வயோதிபரும் வாலிபரும் இடமில்லாது கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தனர். அப்பையனே எழுந்து இடங்கொடுக்க முனைந்தபோது அவன் அன்னை, "எழும்பாதே! அப்புறம் உனக்கு இடமில்லாது போய்விடும்" என்று மெதுவாக எச்சரித்துக் கண்ஜாடையினாலும் அச்சுறுத்தினாள். "அப்பையனுக்கும் காசு எடுத்தீர்கள்தானே" என்று பணம் வசூலிப்பவரிடமும் வாதிடவே செய்தாள். ஆயின் எப்படியோ அந்த ஆடவர்கள் அப்பையனை எழுப்பிவிட்டு அமர்ந்துவிட்டனர். வேறுவழியில்லாது இப்பையன் சுமார் 6 மைல் தூரம் நின்றுகொண்டே பிரயாணஞ் செய்யவேண்டியவனானான். ஆயின், பின்னொருநாள் நடந்த சம்பவமொன்று நடந்தவற்றை இச்சம்பவத்துடன் இணைத்துப்பார்க்கச் செய்யவழி வகுக்கின்றது. அன்றும் 6 வயது நிரம்பாத சிறுவனொருவன் இவ்விதமே அமர்ந்துகொண்டிருந்தான். வயோதிபர் சிலர் ஏறியதும் அவன் அன்னை கண்ஜாடை காட்டினாள். அதை விளங்கியதுபோல பையன் எழுந்து இடம் கொடுத்தான் ஒரு பெரியவருக்கு. பெரியவர்க்கோ மகிழ்ச்சி தாங்கவில்லை. அமர்ந்து கொண்டே சிறுவனையும் தூக்கி மடிமீதிருத்திக்கொண்டார். அவன் நற்குணத்தைப் பாராட்டவும் செய்தார். பையனும் உல்லாசமாக அவர்மடியிலமர்ந்து பிரயாணம் செய்தான். இந்த இரு மங்கையரும் அன்னையர்தானே! ஒருவள் தவறான வழியில் தன் மைந்தனை நடத்துகிறாள். அவனும் கஷ்டப்படுகிறான். மற்றவளோ பெரியார்க்கு மரியாதை செய்யும் நற்பண்பை ஏற்கனவே ஊட்டியவளாகச் சந்தர்ப்பம் வாய்த்தவிடத்தில் அதைச் செய்யவும் தூண்டுகிறாள். அவன் பாராட்டைப் பெறுகின்ற [illegible] அன்னையரே! இந்த நல்ல தாயின் செய்கை உங்கட்கு வழிகாட்டட்டும்!

## போற்றுகின்றோம் நல்மனதுள்ளோரை!

❊ பஸ்வண்டி தன் கடமையைச் செய்துகொண்டிருந்தது. சேமக்காலை ஒன்றைத் தாண்டும்கட்டம் வந்தது. கத்தோலிக்க பெரியாரொருவர் தம் கையில் புகைத்துக்கொண்டிருந்த சுருட்டைக் கையிலெடுத்துக்கொண்டார். தலைகுனிந்து செபத்தில் ஆழ்ந்தார். சிலநிமிடங்களின்பின் சுருட்டு திரும்பவும் அவர் வாயில் இடம்பெற்றது. இறந்தவர்கட்கு மரியாதை செய்து, அவர்கள் ஆன்மசாந்திக்காக வேண்டிய இப்பெரியார் யாரோ? ...... சில வருடங்களின் முன்னே ஆசிரிய கலாசாலையொன்றில் பல கத்தோலிக்க ஆசிரியர்களைப் பயிற்றி வெளியேற்றிய ஒரு பேராசிரியர்.

❊ பாதுகாவலனில் ஒரு ரசிப்பான கட்டுரையைப்படித்துச் சிரித்துக் கொண்டிருந்தனர் சில பள்ளிமாணவர்கள். அருகே ஆசனத்தில் அமர்ந்திருந்த ஓர் இளைஞர் இவர்களது ரசிப்புக்குக் காரணம் அறியப் பத்திரிகையை வாங்கிப் புரட்டிப்பார்த்தார். "சத்தியவேத பாதுகாவலன்" என்று படித்தார். "இது ஒரு நல்லசமயப் பத்திரிகையாயிற்றே! இதில் தகாத விஷயங்களெதுவும் இடம்பெறுதே! நல்ல விஷயத்தைத்தான் ரசிக்கிறார்கள்போலும்" என்று கூறிக்கொண்டே பத்திரிகையை மாணவர்களிடம் கொடுத்தார். இவ்விதம் நம் காவலனுக்குப் புகழ்மாலைசூட்டிய நபர் யாரோ! ...... இவர் சைவசமயத்தைச் சேர்ந்த ஒருவர்.

## சிரிப்போமே ஒருநிமிடம்!........

காலையில் காரியாலம்சென்று மாலையில் வீடுதிரும்பும் மற்றொரு உத்தியோகத்தருக்குப் பஸ்பிரயாணத்தில் அலுப்

(தொடர்ச்சி அடுத்தபக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாப்பரசரின் பாரத விஜயம்

## (பாப்பரசரின் பிரயாண விபரம்)

ஆறுவது சின்னப்ப பாப்பரசர் பாரதத்துக்கு வருகைதரும் செய்தி அகில உலகம் முழுவதிலும் மகிழ்ச்சியுடன் வரவேற்கப்பட்டது. இந்த வருடத்தில் இரண்டாவது தடவையாகப் பாப்பரசர் இத்தாலியை விட்டு வெளியேறித் திருச்சபைத் தலைவர்களின் சரித்திரத்திலேயே மிக நீண்ட பிரயாணமொன்றை மேற்கொள்ள முடிவுசெய்தமை குறித்துப் பாரதநாடும் பெருமை கொண்டது. 38-வது சர்வதேச சற்பிரசாத மகா நாட்டை பம்பாய் நகரில் நடாத்தும் ஏற்பாடுகளை 1960-ம் ஆண்டில் தொடங்கியபோதே இந்திய கர்தினல் கிராசியஸ் ஆண்டகை பாரதத்துக்கு வருகை தருமாறு பாப்பரசர் அருளப்பருக்கு அழைப்பு விடுத்திருந்தார். இந்த அழைப்பை கொள்கையளவில் வரவேற்ற தந்தை பாரதத்துக்கு வருகைதருவது எமக்கு மிக்க மகிழ்ச்சிதரும் நிகழ்ச்சியே. எனினும் நாமோ வயோதிபர். அவ்வளவு நீண்ட பிரயாணத்தை மேற்கொள்ள எமது உடற்கூறுகள் சாத்தியப்படுமா? 1964-ம் ஆண்டளவில் நாம் சீவித்திருப்பது நிச்சயந்தானா என்ற கேள்விக்குறிகளை எழுப்பியிருந்தார், இறைவனின் திருவுளம் வேறாயிருந்தது. அருளப்ப தந்தை இறைவனடி சேர்ந்தார். அவரது கொள்கைகளைத் தழுவிய சின்னப்ப தந்தை திருச்சபைத் தலைவரானார். உரோமாபுரியைவிட்டு வெளியேறுவதில் முன்னவர் கடைப்பிடித்த கொள்கைகளைப் பின்னவர் செயலில் காட்ட முனைந்தார்.

### ஆரம்ப முஸ்தீபுகள்

பாரதத்துக்கு வருகைதருவதென பாப்பரசர் முடிவு செய்துவிட்டார். மகிழ்ச்சிகரமான முடிவுதான். ஆயினும் செயற்படுத்த வேண்டுமே. இலகுவானதா என்ன? பாப்புவின் பிரயாணம் சம்பந்தமாக வத்திக்கான், இத்தாலிய, இந்திய அதிகாரிகள் ஒன்று கூடினர். கர்தினல் கிராசியஸ் ஆண்டகை தலைமையில் திட்டமிட்டனர். பாப்பரசரின் பாதுகாப்புக்கு உத்தரவாதமுடையது இத்தாலிய அரசு. போதிய பாதுகாப்புப் படையினர் பாப்பரசருடன் செல்ல இத்தாலிய ஆட்சியாளர் வழிவகுத்தனர். பம்பாய் மாநில அரசு, பாரத தலைமைப்பீடத்துடன் தொடர்பு கொண்டது. பம்பாய் நகரின் பொலிஸ் படையுடன் மத்திய அரசாங்கம் அனுப்பும் பொலிஸ் இராணுவமும் இணைந்து செயலாற்றுவதென முடிவெடுக்கப்பட்டது. இத்தாலிய பொலிஸ் இரகசியப்படையினர் முன்கூட்டியே பம்பாய் வந்து சேர்ந்தனர். பம்பாய் நகரின் அமைப்பையும் ஒவ்வொரு மூலைமுடுக்குகளையும் மிக்க கவனமாகப் பரிசீலனை செய்தனர். இந்திய அதிகாரிகளின் ஏற்பாடுகளைப் பரிசோதித்தனர். மிக்க திருப்தியடைந்தனர்.

### சிறு சிலுசிலுப்புகள்

எந்த நல்ல காரியத்துக்கும் எதிர்ப்புக் கிளம்பாது விடுவதில்லை. பாப்பரசரின் வருகையைப் பாரதம் ஏகமனதாக வரவேற்றதும் பிரமாண்டமான முறையில் வரவேற்புகள் தருவதும் சிலருக்குப் பிடிக்கவில்லை. பண்பாட்டுக்கு ஒவ்வாத சில விடயங்களில் தலையிட எண்ணினர். பாரதம் பண்பாட்டுக்கும், தார்மீகத்துக்கும் சிறப்புப்பெற்ற நாடு எம்மதத்தினரையும் மகிழ்ச்சியுடன் வரவேற்கும் நாடு. "எப்பொருள் யார் யார்வாய்க் கேட்பினும் மெய்ப்பொருள் காண்பதறிவு" என்ற சீரிய கொள்கையைக் கடைப்பிடிக்கும் நாடு. இச்சிலுசிலுப்புகள்பற்றி அறிந்தபோது அகில பாரதமே கொதித்தெழுந்தது. லட்சக்கணக்கான பிரதிகள் விற்பனையாகும் ஒவ்வொரு இந்திய பிரபல பத்திரிகையும் இச்செயலைக் கண்டித்தன. பாரதப் பிரதமர் லால்பகதூர் சாஸ்திரியும் அரசியல் வித்தகர் காமராஜ நாடாரும் அறிக்கைகள் விடுத்தனர். சிலுப்புக்காரரின் மனமும் மாறியது. பம்பாய் மாநில அரசும் தன்பெருமையையும் பாரதப் பெருமையையும்காக்கக் கடும் நடவடிக்கைகளை மேற்கொண்டது.

### பிரயாண வசதிகள்

பாப்பு தந்தையைப் பாரதத்துக்குக் கொண்டுவர ஏயர் இந்தியா நிறுவனம் தனிவிமானம் அனுப்ப முன்வந்தது. போயிங் 777 என்று சொல்லப்படும் மிகச் சிறந்த ஜெட் விமானமொன்று ஒழுங்கு செய்யப்பட்டது. நங்கா பிரபாவதி என்பது விமானத்தின் நாமம். அந்த விமானத்தில் பணியாற்ற ரீத்தா என்ற கத்தோலிக்க நங்கை தெரியப்பட்டாள். கத்தோலிக்க மதப்பெரியாருக்கு உபசாரம் செய்யப் பண்பாடு மிகுந்த பாரதத்தின் நிறுவனம் கத்தோலிக்க மங்கையையே தெரிந்தெடுத்தது போற்றத்தக்கது. ரீத்தா இளம் வயதினள். பேரழகி. அசாம் மாகாணத்தைச் சேர்ந்தவள். அண்மையில் ஏயர் இந்திய நிறுவனத்தின் விமான உபசரிப்புப் பெண்களுள் தலைசிறந்தவள் என்ற கௌரவத்தையும் பெற்றவள். பாப்பு தந்தையை உபசரிக்கத் தான் தெரிவு செய்யப்பட்டமை கேட்டுப் பூரித்துப்போனாள். ஆனால்......

நான் செய்யப்போவது ஒரு சமாதான யாத்திரை. எனக்குத் தனி விமானம் வேண்டாம். சாதாரண பிரயாணிகள் செல்லும் விமானத்தில்தான் செல்வேன் எனச் சொல்லிவிட்டார் பாப்பரசர். ஏயர் இந்திய நிறுவனத்தார் அஞ்சவில்லை. அதே விமானத்தில் பிரயாணிகளும் செல்வர் என்றும், ஆயின் பாப்புதந்தைக்கு தனியாசனம் தரப்படுவதையாவது ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டனர். தந்தையும் சம்மதித்தார்.

### 1-ந் உ செவ்வாய்க்கிழமை

இதுவரை எந்த ஒரு பாப்பரசரும் மேற்கொள்ளாத புதியபணி. நாலாயிரம் மைல்கள் செல்ல வேண்டும். மாபெரும் உபகண்டமொன்றில் நாலு நாட்களைக் கழிக்கவேண்டும். பல்வேறு இன, மத, மொழி, கலாச்சார மக்களுடன் பழகவேண்டும். இவையெல்லாம் இலகுவானதா என்ன? அத்துடன் தமது தலைவர் கிறிஸ்து பெருமானின் அன்புவழியை அறநெறியைப் போதிக்கச் செல்லும் பிரதிநிதியாகிய தாம் உலகமக்களால் செய்யப்படும் ஆசார உபசாரங்களால் பெருமை கொள்ளாது பற்றற்றவராக விளங்க வேண்டும் என்றெல்லாம் சிந்தித்தார் பாப்பு தந்தை. செவ்வாய்க்கிழமையைச் செபத்திலும் தியானத்திலும் செலவிட்டார். "இராயப்பா நீ கல்லாயிருக்கிறாய். இக்கல்லின் மேல் எமது திருச்சபையைக் கட்டுவோம். நரகத்து வாசல்கள் அதை மேற்கொள்ளா" என்ற நம்பெருமானின் உறுதிமொழிகள் பாப்புதந்தையைத் திடம்கொள்ளச் செய்தன. துணிவுடன் தம் வாழ்க்கையில், ஏன் சத்திய திருச்சபையின் சரித்திரத்திலேயே ஒரு பெரும் நாளைக் கண்டுகழிக்கும் பெருமிதத்துடன் [illegible]

### 2-ந் உ புதன்கிழமை

அதிகாலை மணி 4. பாப்பரசருடன் விமானத்தில் பிரயாணம்செய்ய வேண்டியவர்கள் வத்திக்கான் மாளிகையைவிட்டுப் புறப்பட்டனர். அவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் பாப்பரசரின் பிரதான அமைச்சரான கர்தினல் அமல்டோ சிக்கோஞானி ஆண்டகை, கர்தினல்மார் திருச்சங்கத் தலைவர் கர்தினல் இயூஜின் திசரண்ட் ஆண்டகை என்போராவர். இவர்கள் உடனடியாக பியுமிசியானோ விமானநிலையத்துக்குச் சென்றனர். மழை வருஷிக்கத் தொடங்கியது. இராயப்பர் மகாலயத்தில் காவலர் நடமாட்டம் அதிகமாகியது. அதிகாலையிலிருந்தே காத்திருந்த மக்கள் பாப்பு வருகையை உணர்ந்தனர். அவர்களிடையே குருக்கள், கன்னியர் என்போரும் காணப்பட்டனர். மழைக்கோட்டுகளாலும், குடைகளாலும் மழையைத் தவிர்த்துக்கொண்டு பாப்பரசரின் வருகையை ஆவலுடன் எதிர்பார்த்தனர்.

பாப்புவின் மோட்டார் மகாலய வாயிலைத் தாண்டிச் செல்ல ஆரம்பித்தது. மக்கள் மகிழ்ச்சியோடு ஆரவாரித்தனர். கைகளை வலிக்குமட்டும் ஆட்டி அசைத்துப் பிரியாவிடை கூறினர். பாப்புதந்தையும் ஆனந்தக்கண்ணீருடன் அவர்களை ஆசீர்வதித்தார். பாப்பு வெண்ணிற ஆடைகளை அணிந்திருந்தார். பக்கலில் பாப்பரசரின் காரியதரிசியான தொன் பாஸ்குவால் மச்சி குரவர் அமர்ந்திருந்தார். வழிநெடுக மக்களின் ஆரவாரிப்புத் தொடர்ந்தது. பாப்புவின் இரதம் விமானநிலையத்தை அடைந்தது. அங்கும் ஏராளமான மக்கள் காத்திருந்தனர். அவர்களிடையே பல குருமாரும் காணப்பட்டனர்.

### விமான நிலையத்தில்

பாப்புவின் இரதத்தைக் கண்டதும் எக்காளங்கள் தொனித்தன. மோட்டார் வண்டியிலிருந்து விமானத் தண்டைவரை சிவப்புநிற பட்டுக்கம்பளம் விரிக்கப்பட்டது. ஓர் அதிகாரி பாப்பரசர்மீது குடையை விரித்துப் பிடித்தார். கம்பளத்தின்மீது பாப்பரசர் நடந்துசெல்ல இத்தாலிய தேசிய கீதமும், பாப்பு வாழ்த்துக் கீதமும் இசைக்கப்பட்டன. அதிகாலையில் கண்ணைப்பளிச்சிடும் விளக்கொளியில் கம்பீரமாக நின்றது நங்கா பிரபாவதி என்ற விமானம். அதன் சிறகுகளில் இந்திய, இத்தாலிய கொடிகளும் பாப்புவின் கொடிகளும் அசைந்தாடின. முதலாம் வகுப்புக்குச் செல்லும் கதவண்டை பாப்புவின் சின்னம் பொறிக்கப்பட்டிருந்தது.

அழகிய சேலையணிந்த உபசரிப்புப் பெண் விமானத்தண்டை பரிசுத்த தந்தையை வரவேற்றாள். இந்திய முறையில் தனது இருகரங்களையும் கூப்பி வணக்கம் தெரிவித்தபின் கத்தோலிக்க முறையில் முழந்தாளிட்டுச் செம்படவனின் கணையாழி எனப்படும் பாப்புவின் மோதிரத்தை முத்தமிட்டாள். பின்னர் பாப்புவை அவரது ஆசனத்துக்கு அழைத்துச்சென்றாள். கடைசிப் படியில் ஏறியதும் பாப்புதந்தை நிலையத்தைத் திரும்பிப் பார்த்தார். கூடியிருந்தோர் அனைவரையும் ஆசீர்வதித்தார். பின்னர் தமது கரங்களை அசைத்துப் பிரியாவிடை பெற்றுக்கொண்டார். அப்போது மணி 4-32.

பாப்பரசருடன் அவரது பரிவாரத்தினர் பதினைந்துபேர் விமானத்தில் இருந்தார்கள். இதுதவிர சாதாரண பிரயாணிகள் 61 பேர் இருந்தனர். இந்தப் பிரயாணிகளில் பலர் பாப்புவின் பிரயாணத்தையும், நற்கருணை மாநாட்டையும் பற்றிய செய்திகளைத் திரட்டச் செல்லும் பத்திரிகையாளரா

(தொடர்ச்சி 5-ம்பக்கம்)

---

### நன்றியறிந்த தோத்திரங்கள்

அனந்த தயைச் சொரூபியான தேவனின் மட்டற்ற கருணையால் பரி. கன்னித்தாயார், அந்தரித்தவர்க்கு ஆறுதலான அர்ச். யூதாததேயு 23-ம் அருளப்ப பாப்பரசர், ஆண்டவன் அடியான் சங். குரியாக்கோஸ் எலியாஸ் இவர்களின் மன்றாட்டாலும் விசேஷமாக அனாதரவாளர்களின் தாதையாம் அர்ச். டொண் பொஸ்கோ அவர்களின் மன்றாட்டினாலும், 9 மாதகாலமாக முயன்றும் பலன் இல்லாததால் கைக்கெட்டாதென நம்பிக்கையிழந்திருந்த நிலையில் தொலைந்துபோன எனது தாராதரப்பத்திரம் நான் கேட்டுக்கொண்டபடி குறித்தகாலத்துள் புதுமையாகக் கிடைத்தமைக்கு எனது நன்றியை இவர்களுக்கு இதனால் தெரிவிக்கிறேன்.

எனது இக்கருத்துக்கு உதவிய சங். தாயார், பிள்ளைகளுக்கும் நன்றி.

தாசன். வி. யே.

*　　*　　*

கைவிடப்பட்டவர்களின் பாதுகாவலரான அர்ச்சியசிஷ்ட யூதா ததேயுவிடத்தில் நான் கேட்டமன்றாட்டு அனுகூலமடைந்தது. அவர் நாமம் எங்கும் புகழப்படுவதாக.

கம்பளை.　　ஓர் அடியாள்.

*　　*　　*

சதாசகாயம்புரியும் சகாயமாதாவின் அருளாலும், கோடி அற்புதரான அர்ச். அந்தோனியார் அருளாலும், எனது தாயாரின் நீண்டகாலச் சுகவீனம் குணமடைந்ததற்கு நன்றியறிதலாக நேர்த்தியின்படி இதைப் பிரசுரிக்கிறேன்.

[illegible]　　மாதாவின் அன்பன்

---

### இ. போ. ச. பஸ்சிலே

(மகளிர்மன்றத் தொடர்ச்சி)

பு. நேரத்துடன் வீடுசென்று மனைவி மக்களுடன் இன்பமாகப் பொழுது போக்க முடியவில்லையேஎன்பது அவரது கவலை. இக்கவலையை ரசிப்பாக மாற்றினார் ஒருநாள். பஸ்வண்டியில் பிரயாணம் செய்துகொண்டே பக்கத்திருந்த சகபிரயாணி ஒருவரைப்பார்த்து: "நான் ஞாயிற்றுக்கிழமை வீட்டில் நிற்கும்போது எனது பிள்ளைகள் என்னைப் பார்த்துவிட்டு என் மனைவியிடம் ஓடிப்போய், அம்மா! இந்த மாமா யார்" என்று கேட்கிறார்களே என்றார். நண்பருக்கோ பகிடிவிளங்கவில்லை. ஏனோஎன்று பதிலுக்குக் கேள்விபோட்டார். "ஏன? காலையிலே மின்சாரவிளக்குப் போட்டபடி ஓடும் பஸ்வண்டியில் நான் புறப்படும் போது எனதுபிள்ளைகள் நித்திரை செய்துகொண்டேயிருப்பார்கள். மாலையில் நாலரைமணிக்குக் காரியாலயம் முடிந்ததும், பஸ்வண்டியைப் பிடித்து விடுதிரும்பும்போது வீட்டில் விளக்கு ஏற்றப்பட்டிருக்கும், பிள்ளைகள் நித்திரையாக இருப்பார்கள். ஆகவே அவர்களுக்கு என்னை யாரென்றேதெரியாது. இதனால்தான் ஞாயிற்றுக்கிழமையிலே இந்தமாமா யாரென்றுகேட்கிறார்கள் என்றுசொல்லிச் சிரித்தார். எல்லோருமே குலுங்கக் குலுங்கச் சிரித்தோம். இப்போது சொல்லுங்கள் பஸ்பிரயாணம் அலுப்புக்குரியதா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாப்பரசரின் பாரத விஜயம்

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

வர். அதிகாலை மணி 4-46 விமானம் கம்பீரமாகத் தரையைவிட்டுக் கிளம்பியது. ஒருமுறை சுற்றிவிட்டுப் பேரிரைச்சலுடன் ஆகாயத்தில் பறக்கத் தொடங்கியது. விமானம் கண்ணிலிருந்து மறையும்வரை நிலையத்தில் மக்கள் வீவா இல் பாப்பா என ஆர்ப்பரித்துக்கொண்டேயிருந்தனர்.

## பம்பாய்

பம்பாய்நகர சாந்தாகுருஸ் விமான நிலையத்தில் மக்கள் திரள் அலைமோதியது. நிலையத்திலிருந்து அதிமேற்றிராசனமாளிகைவரை உள்ள ராஜபாட்டையில் பகல்தொடக்கமே மக்கள் இடம்பிடித்துக்கொள்ளத் தலைப்பட்டனர். இந்த வீதியில் கூடியிருந்தோர் தொகை இருபது லட்சத்துக்குமதிகம் என மாலை நாலுமணியளவில் பொலிசார் கூறினர். அழகான தோரணங்களும், வெள்ளிப்பட்டுக் குஞ்சங்களும், முகப்பு வளைவுகளுமாக ராஜபாட்டை விளங்கியது. பாப்புவின் மஞ்சள் வெண்ணிறக்கொடிகளும், பாரதத்தின் மூவர்ணக்கொடிகளும் விமான நிலையத்தை அலங்கரித்தன. நங்கா பிரபாவதி பம்பாய் நகரை நெருங்கிக்கொண்டிருந்தபோது பாப்பரசர் பாரதஜனாதிபதி ராதாகிருஷ்ணனுக்கு ஒரு செய்தியை அனுப்பினர். அச்செய்தியில் திருச்சபைத்தலைவர்தம்மைப் பாரதத்துக்கு வரவழைத்தமைக்காக ஜனாதிபதிக்கு நன்றிதெரிவித்திருந்தார்.

## மாலை மணி ஐந்து

சாந்தாகுருஸ் நிலையம் விழாக்கோலம்பூண்டு விளங்கியது. எந்நாளுமில்லாத திருநாளாக மக்கள் திரள்திரளாக வந்துகொண்டிருந்தனர். பாரதப்பிரதமர் லால்பகதூர்சாஸ்திரியும், உபஜனாதிபதி ஜாகிர் உசேயினும் பாப்புவை வரவேற்கத் தயாராக இருந்தனர். கம்பீரமாக நிலையமைதானத்தில் ஒரு சுற்றுச்சுற்றிவிட்டு நங்கா பிரபாவதி தரித்தது. இந்திய கர்தினால் கிராசியஸ் ஆண்டகை விமானத்தின் படிகளில் ஏறிச்சென்று பாப்பரசரை வரவேற்று அழைத்துக் கொண்டு வெளியே வந்தார். பாப்பரசரை மேற்படிகளில் கண்டபோது ஜனக்கூட்டம் பேரொலி எழுப்பியது. பாப்பு தந்தை தமது கரங்களைத்தூக்கி அவர்களை ஆசீர்வதித்தார்.

பின்னர் பாப்புதந்தை படிகளில் இறங்கி வந்தார். தளத்தில் பாரதப்பிரதமர், உபஜனாதிபதி, கிறிஸ்தவரான பம்பாய் கவர்னர் செரியன்; திருமதி தாராசெரியன், பம்பாய் முதல்மந்திரி நாயக், நேருமகள் இந்திரா, நேரு தங்கை விஜயலட்சுமிபண்டிட், ஆகியோருடன் பாப்பரசர் கைகுலுக்கிக் குசலம் விசாரித்தார். உபஜனாதிபதி பாப்பு தந்தையை வரவேற்பு மேடைக்கு அழைத்துச் சென்றார். அப்போது இந்திய இராணுவ வாத்தியக் கோஷ்டியினர் பாப்புவாழ்த்துக் கீதத்தையும் இந்திய தேசீய கீதத்தையும் இசைத்தனர். மேடையில் சின்னப்ப தந்தை ஏறியபோது பம்பாய் நகர மேயர் ரோஜாமலர்மாலையை அவர் கழுத்தில் அணிவித்தார். அப்போது மக்கள் கையொலி எழுப்பி ஆரவாரித்தனர்.

வரவேற்புரைகளின் பின்னால் பாப்பரசருக்கு நகர பிரமுகர்கள் அறிமுகம் செய்யப்பட்டனர். இத்தருணத்தில் பாப்பரசரைச் சமீபத்தில் இருந்து பார்க்க விரும்பிய சனத்திரள் பொலிஸ் காவலையும் மீறத்தொடங்கியது அளவுக்குமீறிய உற்சாகமும் ஆர்வமும் கொண்ட ஆண்களும், பெண்களும் பொலிஸ், இராணுவத்தினரைமுட்டித் தள்ளிவிட்டுப் பாப்பரசரை நோக்கி ஓடிவந்தனர். அவர்களை அடக்கி அமைதியை நிலைநாட்டுவது மிகக் கஷ்டமாக இருந்தது. இத்தருணத்தில் பம்பாய் முதலமைச்சர் நாயக் ஜனத்திரளின் முன்நின்று கைகூப்பி அமைதியாக இருக்குமாறு உருக்கமாகக் கேட்டுக் கொண்டார்.

ஓரளவு அமைதி ஏற்பட, பாப்பரசரை அழகிய அன்னம்போன்றிருந்த வெள்ளை மோட்டார் வண்டியண்டை அழைத்துச் சென்றனர். பாப்புவின் பக்கலில் இந்திய கர்தினாலும், பாரத உபஜனாதிபதியும் அமர்ந்திருக்க ஊர்வலம் ஆரம்பமாகியது. பதினைந்துமைல் நீளமான ராஜபாட்டையில் ஊர்வலம் சென்றது. பாப்புவின் மோட்டாரைச்சுற்றி இந்திய, இத்தாலிய காவலர்கள் அணிவகுத்துச் சென்றனர். வழிநீளம் பாடசாலைக்குழந்தைகள் வெண்ணுடை தரித்துக் கையில் பாப்புவின் மஞ்சள் வெள்ளைக்கொடிகளைத் தாங்கிப் பாப்பு வாழ்த்துக்கீதம் பாடியபடி காத்து நின்றனர். சாதிமதபேதமின்றி ஏராளமான சனத்திரள் அவர்கட்குப்பின்னே நீண்டநேரம் காத்துநின்றது.

பாப்பரசரின் இரதம் தங்களைத் தாண்டியபோது ஒவ்வோரிடத்திலும் மக்கள் பெருமகிழ்ச்சியால் ஆரவாரித்தனர்; காகோஷம் செய்தனர்; வாயார வாழ்த்தினர். கத்தோலிக்க, கிறிஸ்தவ ஆலயங்களின் கண்டாமணிகளெல்லாம் இடைவிடாது முழக்கம் செய்தன. மாடிவீடுகளிலும், மரங்களிலும், வீடுகளின்மேலும், சுவர்களிலும் மக்கள் ஏறிநின்று பாப்பரசரின் தரிசனம் பெற்றனர். ஓர் இடத்தில் ஒருவர் மகாத்மாகாந்தியின் பெரியதோர் உருவப்படத்தைப் பாப்பரசர் காணும்படி உயர்த்தித் தூக்கிப் பிடித்துக்கொண்டிருந்தார். பாப்பரசர் அப்படத்தைக் கண்டதும் கரங்களைக் குவித்து மகாத்மாவை நமஸ்கரித்தமை அங்கு கூடியிருந்த மக்களின் நெஞ்சைத் தொட்டது.

## மாநாட்டு மைதானத்தில்

நற்கருணை மாநாட்டுமைதானம் சென்றதும் ஊர்வலம் தரித்தது. பாப்பரசர் மைதானத்துக்குள் சென்றபோது ஆர்வம்கொண்ட ஜனத்திரள் மீண்டும் பாப்பரசரை நோக்கி ஓடிச்சென்றது. ஆயினும், பாரதப் பொலிசார் வெகுசிரமத்துடன் நிலைமையைச் சமாளித்தனர். அன்று அபிஷேகம் செய்யப்பட்ட புதிய குருக்களுக்குப் பாப்பரசர் ஆசியளித்து நன்மதிகள் கூறினர். பின்னர், ஊர்வலம் பம்பாய் அதிமேற்றிராசன மாளிகையை நோக்கித் தொடர்ந்தது.

— வளரும்

## இந்தியரின் சமய...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பேறு பம்பாயில் நடைபெற்ற மகாநாட்டுக்குக் கிடைக்கப்பெற்றது பற்றி அவர் தமது மகிழ்ச்சியை இந்தியாவுக்குத் தெரிவித்தார், அப்பேறு பாப்பரசரின் பிரசன்னமேயாகும். மேலும், இந்தியாவானது சமய அனுசாரத்துக்குப் பேர்பெற்ற நாடென்றும். இங்குள்ள ஒறுத்தல், மதவைராக்கியம், ஆழ்ந்த பக்தி முதலியனவே இங்கு சற்பிரசாத மகாநாடு நடைபெறும் பாக்கியத்துக்குக் காரணமென்றும் கூறினர் கருதினலவர்கள்.

# ரோமாபுரியில் குதூகல....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பாப்பரசர் பதிலளிக்கையில், இந்தியாவில் தான் அனுபவித்த இணையற்ற மகிழ்ச்சியையும் இந்தியமக்களின் விவேகம், பொறுமை, தாழ்ச்சி, தயாளம் ஆதியாம் குணாதிசயங்களையும் மெச்சிப்பேசினர்.

இந்தியாவிலே தங்கியிருந்த மூன்று நாட்களிலே தமது தாழ்மையினாலும் இந்தியாவை அறிந்து விளங்கிக்கொள்ள அவர் காட்டிய தணியாத ஆர்வத்தினாலும் இந்தியமக்கள் அனைவரையும் சாதிமத பேதமின்றித் தம்பால் கவர்ந்த பரிசுத்த தந்தை தமக்குப் பிரியாவிடை கூறும்முகமாகப் பம்பாய்க்கு அணித்தாயுள்ள குருஸ் விமானநிலையத்தில் குழுமியிருந்த மக்களுக்கு விடுத்தசெய்தியில், தமது இந்திய திருயாத்திரையைத் தாம்ஒருபோதும் மறக்க முடியாதென்றும், தமது இருதயத்தை இந்தியாவிலேயே விட்டுச்டுச் செல்வதாகவும் கூறினர். அதன்பின் பரிசுத்தபாப்பரசர் இந்திய முறையிலே தமது இருகரங்களையும் கூப்பி மக்களுக்கு ஆசாரம்செய்து சிலுவை அடையாளம் செய்தபின் தமக்காகக் காத்திருந்த விமானப்படிகளில் மெதுவாக ஏறத்தொடங்கியதும் சமாதானத்தின் அடையாளமாக ஒரு கூட்டம் புருக்கள் விடுதலைசெய்யப்பட்டு நாலாபக்கமும் பறந்தோடின. அதேநேரத்தில் பரிசுத்த தந்தையைத் தாங்கிச்செல்லும் விமானமும் படிப்படியாக மேலே உயர்ந்தது கீழேநின்ற மக்கள் கைக்குட்டைகளை எடுத்துத் தங் கண்களைத் துடைத்தனர்.

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

எனது புதல்வன் பரீட்சைகாலத்தில் கடுஞ் சுகவீனமாக இருந்தும், யேசுவின் இரக்கத்தாலும், தேவதாயின் வேண்டுதலினாலும், கோடியற்புதரான அர்ச். அந்தோனியாரின் சலுகையாலும் பரீட்சையிற் சித்தியடைந்தார். நேர்த்தியின்படி இதைப்பாதுகாவலனில் பிரசுரிக்கிறேன்.

சிங்கப்பூர். நா. விக்ரோறியா.

இலங்கை வானொலியில்
### கத்தோலிக்க நிகழ்ச்சிகள்

நாள் : 19-12-64 சனி
20-12-64 ஞாயிறு
21-12-64 திங்கள்

நேரம் : காலை 6-55 முதல்
7-00 வரை


உரை : வண. பிதா
G. T. பாலசுந்தரம், O. M. I.

### உங்கள் சந்தாவைச் செலுத்திவிட்டீர்களா ?

### மிருசுவில்

அர்ச் நீக்கொலா முனீந்திரரின் அஸ்தித்தைலம் பாரியூர் எனுமிடத்திலிருந்து வண. என். குணசீலன் சுவாமியாரால் கொண்டுவரப்பட்டு மிருசுவில் தேவாலயத்தில் பொதுமக்களின் ஆராதனைக்கு வைக்கப்பெற்றுள்ளது. விசுவாசிகள் அனைவரும் அர்ச். நீக்கொலா முனீந்திரனின் ஆசியைப் பெறுவார்களாக.

அல்ஸ்ட்ரன்
மீன்பிடி வலைகள்




அல்ஸ்ட்ரன் மட்டுமே இவ்வனுகூலங்கள் அனைத்தையும் அளிக்கவல்லது.

CIC அல்ஸ்ட்ரனின் விசேஷத் தன்மைகளை மற்ற நார்களுடன் ஒத்திட்டுக் காட்டும் இலவசப் புத்தகம் ஒன்றை பெற இன்றே எமக்கு எழுதுக.

கெமிக்கல் இன்டஸ்ட்ரீஸ் (கொழும்பு) லிமிடெட்,
தபால் பெட்டி 352, கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உல்லாசவேளை

## நமது நிருபர் அமலன்

# பம்பாய் மாநாடு

குறிப்பு: பம்பாய் மாநாட்டில் கலந்துகொண்ட அகஸ்ரினும், பெரியண்ணாவும் இன்றைய உல்லாசவேளையில் சுவையான செய்திகளைத் தருகின்றார்கள்.

அம்மா: நீங்கள்தான் பம்பாய் மாநாட்டுக்கு நேரடியாகச் சென்றிருந்தாலும் நாங்களும் ஒருவிதமாக அதில் கலந்துகொண்டோம்.

அகஸ்ரின்: எப்படி அம்மா?

அப்பா: பத்திரிகைகள் ஓரளவிற்கு பாப்பாண்டவரின் வருகையையும், பம்பாய் மாநாட்டுச் சிறப்புகளையும் வர்ணித்திருந்தன. இலங்கை வானொலியும் இந்திய வானொலியும் முக்கியமான செய்திகளை ஒலிபரப்பின. எனவே இவைமூலம் நாம் அறிய முடியாதிருந்த புதுச்செய்திகள் எதையாவது சொல்லுங்கள்.

அக: பாப்பாண்டவரின் வருகையைப் பொதுவாக எல்லா இந்தியமக்களும், எல்லாமதத்தவரும் எல்லா இனத்தவரும் மகிழ்ச்சியோடு வரவேற்றிருக்கிறார்கள். இந்திய அரசாங்கம் வெகு உற்சாகத்துடன் பாப்பரசரின் வரவேற்புக்கும் பாதுகாப்புக்கும் தன்னாலானதெல்லாவற்றையும் செய்து தந்தது.

பெரியண்ணா: இந்தச்செய்தி தபால் தலைகள் சேகரிக்கும் அன்ரனுக்கு பிடித்தமானதாயிருக்கும். சற்பிரசாத மாநாட்டின் நினைவாகவும் பாப்பு விஜய ஞாபகார்த்தமாகவும் இந்திய தபால் இலாகா ஒரு விசேட தபால்தலையை வெளியிட்டது. பதினைந்துபைசா பெறுமதிகொண்ட இந்த தபால் தலையில் இரண்டாயிரம் வருடங்கட்குமுன்னர் சத்தியவேதத்தை இந்தியாவுக்குக் கொணர்ந்த தொம்மையப்பரின் உருவம் அச்சிடப்பட்டுள்ளது. இளஞ்சிகப்பு நிறமான இந்த தபால்தலைக்கு வெகுகிராக்கியாயிருந்தது. வெகு சிரமத்தின்பேரில் அன்ரனுக்காக இரண்டு தலைகள் வாங்கி வந்தேன்.

அன்ரன்: மிக்கநன்றி பெரியண்ணா.

அப்பா: இந்திய அரசாங்கம் கத்தோலிக்க திருச்சபையைக் கௌரவிக்குமுகமாக தபால் தலைவெளியிடுவது இதுதான் முதல்தடவை அல்ல. 1952-ல் அர்ச். சவேரியாரின் மரணத்தின் நாலாவது நூற்றாண்டுவிழாவைக் கொண்டாடியபோது இந்திய தபால் இலாகா சில தபால் தலைகளை வெளியிட்டது. ஒன்றில் லட்சக்கணக்கான விசுவாசிகட்கு ஞானஸ்நானம் கொடுத்ததும், தற்போது ரோமைநகரில் காப்பாற்றப் படுவதுமான அவரது வலதுகாத்தின் உருவம் அச்சிடப்பட்டது. மற்றைய தலையில் சவேரியாரின் முழுஉருவமும் பொறிக்கப்பட்டிருந்தது. இந்தத் தபால்தலைகட்கு அக்காலத்தில் நல்மதிப்பு இருந்தது.

கார்மெலா: சவேரியாரின் சடலத்தையும் தரிசித்தீர்களோ?

பெரி: பின்னே விடுவோமா என்ன? சவேரியாரின் சடலத்தையும் தரிசிக்க வந்த சனத்திரளின் எண்ணிக்கை மிக அதிகம். கால்கடுக்க கியுவரிசையில் பல மணிநேரங்கள் காத்திருக்கவேண்டியதாயிற்று.

அக: 1552-ம் வருடம் மார்கழிமாதம் 2-ந் தேதி சவேரியார் சீனதேசத்தில் காலமானார். அடுத்த மாசிவரை அங்குதான் சடலத்தை வைத்திருந்தனர். பின்னர் இந்தியாவுக்குக் கொண்டுவரும் முயற்சிகள் எடுக்கப்பட்டன. 1554-ல் இந்தியாவில் கோவைக்குக் கொண்டுவந்து அர்ச். சின்னப்பர் தேவாலயத்தில் பூச்சிதமாகக் காப்பாற்றினர். 1624-ல் பொம்சேசு தேவாலயத்தில் இதற்கென அமைக்கப்பட்ட விசேட கல்லறையில் அடக்கம் செய்தனர்.

நிர்மலா: சடலத்தை நேரடியாக பார்க்க இயலுமோ?

பெரி: 1630-ல் தான் சவேரியார் சடலம் பொதுமக்கள் தரிசனத்துக்காகப் பகிரங்கமாக வைக்கப்படத் தொடங்கியது. 1652வரை பாதங்களை முத்தமிட அனுமதிக்கப்பட்டது. தற்போது கண்ணாடிப்பேழையினுள் வைத்திருக்கிறார்கள்.

அக: சவேரியாரின் திருநாளான மார்கழிமாதம் 3-ந் தேதியன்று பாப்பரசர் ஒவ்வொரு கண்டத்திலுமிருந்து ஒவ்வொரு குருமாரைத் தெரிந்தெடுத்து அவர்கட்கு மேற்றிராணித்துவ அபிஷேகம் கொடுத்தார். அந்த வைபவம் மிகச் சிறப்பாக இருந்தது.

அஞ்சலா: பாப்பரசர் எங்கே தங்கியிருந்தார்?

பெரி: பம்பாய் அதிமேற்றிராணியார் கிராசியஸ் கர்தினாலாண்டகையின் வர்சஸ்தலத்தில் தங்கியிருந்தார். தமக்குப் பிரதானமான ஆயத்தங்கள் எதுவும் தேவையில்லையென்று எளிமையைவிரும்பும் இந்தப்பாப்பு நேரகாலத்துடனே தெரிவித்துவிட்டார். ஆகவே சாதாரண ஆயத்தங்களே செய்யப்பட்டன. சாதாரண உணவுகளே தரப்பட்டன. 3 அறைகள் மட்டுமே பாப்புவுக்காகவும் அவரது உபகரணங்கட்காகவும் ஒதுக்கப்பட்டன.

அக: ஒரு முக்கிய நிகழ்ச்சி. பாப்பாண்டவரைப் பார்க்க இலட்சக்கணக்கானமக்கள் பொலிஸ் கட்டுக்காவலையும் மீற முயற்சித்துக்கொண்டிருந்தனர். இராணுவத்தினரும் பொலிசாரும் தங்களாலானமட்டும் தடுத்து நிறுத்திப் பாப்பாசருக்கு வழிவிட்டனர். அந்தவேளையில் பதினொருவயது மதிப்பிடத்தக்க சிறுமியொருத்தியை அவளது தாய் முன்னே தள்ளினாள். இத்தாலிய இரகசியப்பொலிசார் அச் சிறுமியைப் பின்னே தள்ளினர். மீண்டும் அன்னை சிறுமியை முன்னே தள்ளினாள். இந்தியபொலிசார் மீண்டும் பின்தள்ளினர். ஆயினும் மூன்றாம்தடவை முன்னுக்குத்தள்ளப்பட்ட சிறுமி எதிர்பாராத வகையில் பாப்பரசரிடம் விரைந்தோடினாள். பாப்பரசரின் மோதிரத்தை முத்தமிட்டாள். பாப்பரசர் அவளது துணிவைக்கண்டு வியந்து கன்னத்தில் தட்டிக்கொடுத்தார். இந்தியாவிலுள்ள பொலிவிய தூதரின் புதல்வி அவள் எனப் பின்னர் தெரிவிக்கப்பட்டது.

சின்னண்ணா: பாப்பாண்டவருக்கு பரிசுகள் கிடைக்கவில்லையோ?

பெரி: ஏன் இல்லை. இந்திய பிரபிரமுகர்கள் மட்டுமல்ல சாதாரண மக்கள்கூட பல அன்பளிப்புகளை இதய பூர்வமாகக் கொண்டுவந்தனர். இவைகளெல்லாம் தற்போது இந்திய கர்தினாலின் மாளிகையில் காட்சிக்கு வைக்கப்பட்டன. ஏயர் இந்திய விமானமொன்று இவற்றைப் பின்னர் றோமாபுரிக்குக் கொண்டுசெல்லும்.

நிர்: யாரோ பத்திரிகைப்பிரதிநிதியொருவர் இறந்துவிட்டாராமே?

அக: பாப்பரசரைப் படமெடுக்க வென்று சயாம் கிளாஞ்சர் என்ற பத்திரிகைநிருபர் வெகு உற்சாகத்துடன் சாந்தாக்குருஸ் விமானநிலையத்தின் உயர்மாடியில் காத்திருந்தார். ஜனக்கூட்டம் அதிகமாக நெருக்கியவேளையில் பாப்புவின் விமானம் வந்திறங்கியபோது படமெடுக்கும் ஆர்வத்தில் உயரேசெல்ல முயற்சித்தார். எதிர்பாராத விதமாக பலகையொன்றுடன் அவரது சிரசு அடியுண்டது. அடுத்த நாள் மருத்துவமனையில் காலமானார். கடந்த மார்கழியில் விவாகம்செய்த இந்த 26வயது இளைஞருக்கு 3மாதம் நிரம்பிய குழந்தையொன்றுமுண்டு. பாப்பரசர் இந்த மரணச்செய்தியைக் கேட்டபோது அதிர்ச்சியடைந்தார். தமதுவிசேட அனுதாபச்செய்தியொன்றை அந்த இளம்விதவைக்கு அனுப்பினார். 5000 பவுண்கள் பெறுமானமுள்ள காசோலையொன்றையும் அவளுக்கு அனுப்பிவைத்தார்.

அஞ்சலா: வேறுஎன்ன நிகழ்ச்சிகளில் பாப்புதந்தை தலையிட்டார்?

பெரி: இந்திய அகதிகள் வாழும் முகாமொன்றைப் பார்வையிட்டு அகதிக் குழந்தைகளோடு போசனம்அருந்தினார். பிறமதத்தலைவர்கள் எல்லோரையும் வரவேற்றுக் கலந்துரையாடினார். பாரதத்தலைவர்களுடன் பேச்சு வார்த்தைகள் நடாத்தினார். இந்தியாவில்வதியும் பல்வேறு சாதியினரையும் மிகக் கொடூரம் நிறைந்தவர்கள் எனக் குறிப்பிடப்படும் நாகாலாந்து மக்களையும் சந்தித்துப் பேசினார். மொத்தத்தில் இந்தியமக்களிடம் நற்பெயரை வாங்கிக்கொண்டு சென்றிருக்கிறார் பாப்பரசர்.

அன்: பாப்பரசரின் வருகையால் பம்பாய்நகருக்கும் மிகுந்த சிறப்பு. இல்லையா பெரியண்ணா.

பெரி: பம்பாய் நகரமே சனக்கூட்டத்தின் பாரத்தைத் தாங்கமுடியாமல் திண்டாடியிருக்கும். என்ன சனத்திரள். என் வாழ்நாளில் இப்படிப்பட்ட சனக்கூட்டத்தை கண்டதேயில்லை. அத்தோடு பாப்பரசரின் தினசரி நிகழ்ச்சிகளைப் படித்தபின் அவர் எங்கே செல்கிறாரோ அங்கெல்லாம் பலமணித்தியாலங்களுக்கு முன்னதாகவே சென்று சனநெரிசல்களில் பல சங்கடங்களையும் அனுபவித்துக் கொண்டு அவரது திருமுக தரிசனையை உற்சாகத்துடன் பெற்றஇலட்சக்கணக்கான கத்தோலிக்கரல்லாதவர்களின் பண்பையும் பாராட்டவேண்டும்.

அக: மொத்தத்தில் பாப்பரசரின் பம்பாய்விஜயம் கத்தோலிக்க மதத்துக்குப் பெரும் சிறப்பைத் தந்துள்ளது என்று துணிந்து கூறலாம்.

# சிரியுங்கள்

அண்மையிலே திருமணஞ்செய்துகொண்ட இளம்பெண்கள் இருவர் அகஸ்மாத்தாக ஒருவரையொருவர் சந்தித்தபோது தங்கள்கெட்டித்தனத்தைப் பாராட்டிக்கொண்டார்கள்.

ஒருபெண் :— என்கணவர் என்னை மணஞ்செய்துகொண்டபோது சங்கிலித்தொடர்போன்று சிகறெற் புகைத்துக்கொண்டுவந்தார். ஆனால், எனது கெட்டித்தனத்தாலே அவரைத்திருத்திப்பிடித்துவிட்டேன். இப்போது அவர் புகைப்பதுமில்லை, சிகரெற்றுக்குப் பணம்கேட்பதுமில்லை.

மறுபெண் :—உதுதானா பெரிய காரியம். என்கணவர் என்னைமணஞ்செய்துகொண்டபோது பச்சைத்தண்ணீர் குடிப்பதுபோன்று படுகுடிகாரனாய் இருந்தார். ஆனால், எனதுகெட்டித்தனத்தாலே நான் அவரைத் திருத்திப் போட்டேன். இப்போது அவர் குடிப்பதுமில்லை குடிப்பதற்குப்பணம் கேட்பதுமில்லை.

* * *

தந்தை :—(சின்னப்பீற்றரைப் பார்த்து) தற்செயலாகத்தான் உனது அண்ணன் ஜிம்மியைக் கண்ணில் அடித்தாயென்று நிச்சயமாகச் சொல்லுவாயா?

பீற்றர் :—ஆம், பப்பா! நிச்சயமாகத்தான் சொல்லுகிறேன். தற்செயலாகத்தான் அடி கண்ணிற்பட்டது. நான் நினைத்துஅடித்தது மூக்கில்தான்.

"பாம் பீச்"



கண்ணியம் நிறைந்த சேவைக்கு
ஒப்பற்ற
கடலோர மாளிகை

▲



உல்லாசப்
பிரயாணங்கட்கும்
உபசார
வைபவங்கட்கும்
உகந்த தலம்
"பாம் பீச்"

* * *

வளலாய் தந்தி: "பாம்பீச்," அச்சுவேலி.
அச்சுவேலி தொலைபேசி: 628, யாழ்ப்பாணம்,

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 20 இலக்க, 12-ம் குறுக்குத்தெருவில் வதியும் ரூதி நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1964-ம் ஆண்டு மார்கழி மாதம் 5-ந் திகதி சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப் பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org